بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 29.08.14 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 29 August 2014 (Tamil)**

**நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். நமக்கு ஒவ்வோர் அடியிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து வழிகாட்டல் கிடைத்து விடுகின்றது. மேலும் இஸ்லாத்தின் உண்மையும் இறையச்சமும் தெரிந்து விடுகின்றது. யாருக்குப் பின்னால் செல்ல வேண்டும்; யாருக்குப் பின்னால் செல்லக் கூடாது என்று அறியாத சிதறுண்டு போன இந்த முஸ்லிம்களைப் போன்று நாம் இல்லை. அவர்களின் பெயர்தாங்கி ஆலிம்கள், மார்க்கத் தலைவர்கள் தவறான வழிகாட்டலினால் அவர்களை ஒருவர் மற்றவரின் கழுத்தை வெட்டுவதில் ஈடுபடுத்தி விட்டனர்.**

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

இன்று மாலை பிரித்தானியாவின் ஆண்டு மாநாடு முறைப்படி துவங்கும் - இன்ஷா அல்லாஹ். எப்படி இருப்பினும் இந்த ஜுமுஆவும் மாநாட்டின் ஒரு பகுதிதான். நான் சென்ற குத்பாவில் கூறியது போன்று, மாநாட்டிற்கு வருகின்ற விருந்தினர்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் வருகின்றனர். அந்த நோக்கம், மார்க்கத்தின் உண்மை பற்றிய ஞானத்தைப் பெற வேண்டும்; மார்க்கத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்; ஆன்மீகத்தில் முன்னேற்றமடைய முயற்சி செய்ய வேண்டும்; நல்ல சூழலின் தாக்கத்தைப் பெற்று தனது இயல்பான நன்மையை முன்னரை விட சிறப்பானதாக்க முயற்சி செய்ய வேண்டும்; உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவோம் என்று நாம் செய்திருக்கின்ற அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக உயர்விலும் உயர்வான வழிகளை கண்டறிந்து அவற்றின்படி நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்; அல்லாஹ்வுக்கான உரிமைகளை நிறைவேற்றுவதில் முன்னரை விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டும்; நமது நாவுகளை இறைவனை நினைவு கூறுவதில் நனைக்கவும், நனைந்தவாறு இருக்கவும் முயற்சி செய்ய வேண்டும்; ஆரம்பத்திலிருந்தே இதன்படி செயல்பட்டிருந்தால் முன்னரை விட அதிகமாக அதற்காக முயற்சி செய்ய வேண்டும். இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வும், அவனது தூதரும் நம்மிடம் விரும்பும் அந்த தகுதியை இறைவணக்கத்தில் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் மனித படைப்பின் குறிக்கோளாக இறைவணக்கத்தையே குறிப்பிட்டுள்ளான். நான் ஜின்னையும் இன்ஸையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என அல்லாஹ் கூறுகிறான்.(51:57) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: இந்த வசனத்தின்படி, மனித வாழ்வின் உண்மையான நோக்கம், இறைவனை வணங்குவதும், இறைவனைப் பற்றிய ஞானத்தை அறிவதும், இறைவனுக்காகவே ஆகி விடுவதுமேயாகும்.

எனவே ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபரும் தமது இந்தப் பயணத்தை முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக மேற்கொண்ட பயணமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதை நோக்கமாகக் கொள்ளுங்கள். அது இல்லையென்றால் பிறகு, மிகவும் கஷ்டப்பட்டு செலவு செய்தும் அவர்கள் இந்த மாநாட்டின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக மாட்டார்கள். எனவே இது மாநாட்டில் கலந்துகொள்பவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பாகும்; மேலும் இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதுதான் அவர்களின் முக்கியத்துவத்தையும் அதிகப்படுத்துகிறது. அதன் காரணமாகத்தான் நான் சென்ற குத்பாவில் சொன்னதுபோல, இந்த விருந்தினர்களுக்கு தொண்டு செய்பவர்களுக்கும் முக்கியத்துவம் இருக்கிறது. அவர்கள் விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதுடன் நிகழ்ச்சிகளையும் கேட்டு இந்த மாநாட்டின் சூழலில் கலந்து கொண்டு கொள்கை அளவிலான, செயல் அளவிலான தமது வாழ்வில் சிறந்தவற்றிற்கான வழிமுறைகளையும் உருவாக்கிக் கொள்கின்றனர். எனவே விருந்தினர்களும்,

விருந்தோம்பல் செய்பவர்களும், பணியாளர்களும், டியூட்டி கொடுப்பவர்களும், இந்த மூன்று நாட்கள் தம்மை கொள்கை அளவிலும், செயல் அளவிலும் சிறந்தவர்களாக ஆக்குவதற்கான பயிற்சியாகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். எனவே இதிலிருந்து முழுமையான முறையில் பயன்பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்கென உங்கள் முழு கவனம் மற்றும் ஆற்றல்கள் மூலமாக இதில் பங்கு பெறுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாட்டிற்கென என்ன நோக்கங்களைக் குறிப்பிட்டிருந்தார்களோ அவற்றை நாம் எப்போதும் நினஇவிற் கொள்ள வேண்டும். **அவர்கள் கூறினார்கள்:**

''என்னை ஏற்றுக் கொள்பவர்களின் உள்ளம் மறுமையின் பக்கம் முற்றிலும் குனிய வேண்டும். இது ஒன்றும் சாதாரண விஷயமல்ல. ஒவ்வொரு மனிதனும் தனது முயற்சியால் இதனைப் பெற்று விட முடியாது. ஆயினும் அதற்காக எந்த அளவுக்கு செயல் அளவில் முயற்சி செய்ய முடியுமோ அதனை செய்து பிறகு இவ்வாறு துஆவில் ஈடுபட வேண்டும்: அல்லாஹ்வே! உலகத்தின் பிரச்சனைகளும் தடைகளும் எனது ஒவ்வோர் அடியிலும் நிற்கின்றன. நீ உனது அருளால் உனது திருப்தியின் வழியில் என்னை நடத்திச் செல்வாயாக; ஓர் அன்பிற்குரியவருக்காக நேசத்திற்குரியவருக்காக இருக்கும் உன்னைப் பற்றிய அத்தகைய அச்சத்தை என் உள்ளத்தில் நிரப்புவாயாக. எந்தவோர் அநீதியின் காரணமாக அந்த அச்சம் இருப்பதில்லை; மாறாக, அன்பின் காரணத்தால் இருக்கிறது. எனது ஏதாவதொரு செயல் உனது கோபத்திற்குக் காரணமாக ஆகிவிடக் கூடாதே என்ற அச்சம். எந்த நன்மைகளை செய்யுமாறு நீ கட்டளையிட்டுள்ளாயோ அவற்றின் பக்கம் எனது கால்கள் செல்லட்டுமாக. மேலும் எவற்றை செய்ய வேண்டாம் என நீ கட்டளையிட்டுள்ளாயோ அந்த எல்லாவற்றையும் எனது சிந்தனை வெறுத்தவாறு அவற்றை வெளியேற்றட்டுமாக. இறையச்சத்தின்படி நடந்து சென்றவாறு, அல்லாஹ்வின் அடியார்களுக்கான உரிமையையும் நிறைவேற்றுபவனாக மாற வேண்டும். அல்லாஹ்வின் உரிமையின் பக்கமும் எந்நேரமும் எனது கவனம் இருக்க வேண்டும். எனது வாழ்வின் நோக்கமாக நீ எதனைக் குறிப்பிட்டுள்ளாயோ அதனைப் பெறுபவனாக நான் மாற வேண்டும். உயந்த ஒழுக்கத்திலும் எத்தகைய உன்னதமான முன்மாதிரியாக வேண்டுமென்றால் அதனைப் பின்பற்றுவதை மக்கள் பெருமையாக நினைக்க வேண்டும்.''

எனவே மாநாட்டில் கலந்து கொள்பவர்களின் துஆக்களும், சிந்தனைகளும் இதனையே சுற்றி வர வேண்டும், அல்லாஹ் நமக்கு திருக்குர்ஆனில் இறைவணக்கத்திற்கான வழிமுறையைக் கற்றுத் தந்திருக்கின்ற, அதன் உயர் தரத்தை அடைவதற்கான வழிகளைக் காட்டியிருக்கின்ற அதே நேரத்தில் இறைபடைப்பினங்களுடன் தொடர்புடைய உயர்ந்த நல்லொழுக்கங்களையும் அடையாளம் காட்டித் தந்திருக்கின்றான். இது அவனுடைய மாபெரும் அருளாகும். உயர்ந்த ஒழுக்கத்தைப் பெறுவதும் அவற்றை வெளிப்படுத்துவதும் இந்த மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவசியமானதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த தகுதி எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி **அன்னார் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

''மனிதன் முடிந்த அளவுக்கு தனது வசதியை விட தனது சகோதரரின் வசதிக்கு முன்னுரிமை வழங்காத வரை அவனுடைய ஈமான் ஒருபோதும் சரியானதாக இருக்க முடியாது என நான் உண்மையாகவே கூறுகிறேன்.''

**கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகிறார்கள்:** இந்தத் தகுதியைப் பெறுவது சாதாரண விஷயமன்று. மற்றவர்களின் வசதிகளைக் கவனத்தில் கொள்பவர்கள் பலர் இருக்கின்றனர். ஆனால் தமது தகுதிக்கேற்ப தனது வசதியை தியாகம் செய்யாமல் அவ்வாறு கவனித்துக் கொள்ள முடியுமென்றால் கவனித்துக் கொள்கிறார்கள். ஆனால் ஒருவர் தனது வசதியை விட மற்றவரின் வசதிக்கு முன்னுரிமை கொடுக்கும் உதாரணத்தை மிக அரிதாகப் பார்க்க முடிகிறது. **இரத்த உறவுகளில் கூட சிலர் அப்படிப்பட்ட தியாகங்களை செய்து விடுகிறார்கள் அதாவது தம்மை விட அவர்களுடைய வசதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து விடுகின்றனர். ஆனால் இந்த மாதிரியான தியாகத்தை அனைவருக்காகவும் கொடுப்பவர்கள் மிகக் குறைவானவர்கள்தான்.** மற்றவர்களின் வசதிகளைப் பற்றி **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

'' மற்றவர்களின் துன்பங்களை தனது துன்பத்தைப் போன்று கருதாத வரை உண்மையான நம்பிக்கையாளராக முடியாது. எனது நோயுற்ற ஒரு சகோதரர் துன்பத்தில் இருக்கும்போது நான்

சுகமாக தூங்கிக் கொண்டிருந்தால் எனது நிலை பற்றி பரிதாபமே! என்னால் முடிந்த அளவுக்கு அவருக்கு சுகமளிப்பதற்கான வழிவகைகளை உருவாக்க நான் முயற்சி செய்ய வேண்டும். **ஒரு மார்க்க சகோதரர் தனது சுயநலத்தால் என்னிடம் கடுமையாக பேசினாலும் நான் அவரிடம் அறிந்து கொண்டே கடுமையாக நடந்து கொண்டால் எனது நிலை பரிதாபத்திற்குரியதே!** பொறுமை காட்டுவதும் அவருக்காக, இவர் ஆன்மீகமான முறையில் நோயுற்றிருக்கிறார். அல்லாஹ் இவரை சீர்திருத்துவானாக என அழுதழுது துஆ செய்வதே எனது வேலையாகும்.ஆக, இதுதான் அல்லாஹ் மார்க்கத்தில், திருக்குர்ஆனில் நமக்கு இட்ட கட்டளையாகும். *ருஹமாவு பைனஹும்(48:30)* நம்பிக்கையாளர்கள் தமக்குள் ஒருவருக்கொருவர் கருணையின் உணர்வைக் கொண்டுள்ளனர். மேலும் கருணையின் உணர்வுகளின்காரணமாக ஒருவர் மற்றவரின் வேதனையை உணர்கின்றனர். வேதனையை உணர்ந்து அவருக்காக செயல் அளவிலான முயற்சியும் செய்கின்றனர்; துஆவும் செய்கின்றனர்.”

எனவே நம்மில் எத்தனை பேர் இந்த தகுதியைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றோம்? என்பதைப் பற்றி நாம் ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. நாம் இதன்படி செயல்பட ஆரம்பித்து விட்டால் நம்மில் இருக்கின்ற சிறிய, பெரிய சண்டை சச்சரவுகள் அனைத்தும் முடிவுக்கு வந்து விடும். நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து ஒவ்வோர் அடியிலும் வழிகாட்டல் கிடைத்துக் கொண்டிருக்கிறது; இஸ்லாத்தின் உண்மையும் இறையச்சமும் பற்றி நமக்குத் தெரிய வருகிறது. அத்தகைய நற்பேறு பெற்றவர்கள் நாம்! எவருக்குப் பின்னால் செல்ல வேண்டும்? எவருக்குப் பின்னால் செல்லக் கூடாது என்பதே தெரியாத இந்த சிதறுண்டு கிடக்கின்ற முஸ்லிம்களைப் போன்று நாம் இல்லை!! அவர்களுக்கு தவறாக வழிகாட்டி, அவர்களின் பெயர் தாங்கி தலைவர்கள் மார்க்கத் தலைவர்கள் ஒருவர் மற்றவரின் கழுத்துகளை வெட்டுவதில் ஈடுபடுத்தி விட்டனர். எனவே அவர்களுக்காவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. அவர்கள் தமது இந்த செயல்களின் காரணமாக அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி விடக் கூடாது. உலகத்திற்கு முன்னால் இஸ்லாத்தைப் பற்றிய தவறான சிந்தனையை எடுத்து வைத்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவப் பெயரை ஏற்படுத்த முயற்சி செய்பவர்களாக ஆகாதிருப்பார்களாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இலக்கணமாகக் கூறியது என்னவென்றால், எவருடைய நாவிலிருந்தும் கைகளிலிருந்தும் ஒவ்வொரு முஸ்லிமும், சாந்தியின் தூதை எடுத்துரைப்பவரகவும் எவ்வித வேறுபாடுமின்றி சாந்தி பெற்றவராகவும் இருக்கின்றாரோ அவர்தான் முஸ்லிம் ஆவார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதைத்தான் கூறினார்கள்: உண்மையான நம்பிக்கை கொண்டவர், முஸ்லிமிடமிருந்து நம்மவர் மட்டுமல்லாது மற்ற மதத்தினர்களும் சாந்தி பெற்றவர்களாக இருக்க வேண்டும்; அவர்கள்தான் உண்மையான முஸ்லிம்கள் எனக் கூறினார்கள்.

திருக்குர்ஆன் எத்தகைய உயர்ந்த நல்லொழுக்கப் பண்புகளைப் பற்றிக் குறிப்பிடுள்ளதோ அவற்றில் சிலவற்றைப் பற்றி நான் எடுத்துக் கூறுகிறேன். நீங்கள் ஏன் உயர்ந்த ஒழுக்கங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றிக் கூறுகிறது: *குன்தும் கைர உம்மத்தின் உக்ரிஜத் லின்னாஸி. தஃமுரூன பில் மஃரூஃபி வதன்ஹவ்ன அனில் முன்கரி.* மக்களுக்காக உருவாக்கப்பட்ட நீங்கள் சிறந்த சமுதாயத்தினராவீர்கள். நீங்கள் நன்மையை ஏவுகின்றீர்கள்; தீமையைத் தடுக்கின்றீர்கள். (3:111) **உலகத்தில் அதிகமாக தான தருமங்கள் கொடுப்பவர்கள் யார் என்று அண்மையில் ஓர் ஆய்வு எடுக்கப்பட்டது. பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றுபவர்களை ஒப்பாய்வு செய்ததில், தான தர்மங்கள் செய்பவர்களில் அதிகமானவர்கள் முஸ்லிம்கள்தான் என தெரிய வந்தது!** இந்த நன்மை முஸ்லிம்களுக்கு தான தருமங்கள் செய்யுமாறு கட்டளையிட்டதன் காரணத்தினால் ஆகும். **அல்லாஹ் இந்த முஸ்லிம்களை மற்ற நன்மைகளையும் மேற்கொள்பவர்களாக ஆக்குவானாக.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: மாநாட்டின் ஒரு குறிக்கோள், எண்ணற்ற மக்கள் ஓரிடத்தில் ஒன்று சேரும்போது சில தேவைகள் உருவாகின்றன. அப்படிப்பட்ட தருணத்தில் ஓர் உண்மையான அஹ்மதியின் கடமை என்னவென்றால், தனது தேவைகளை மற்றவர்களுக்காக தியாகம் செய்து விட வேண்டும். அதில் அன்பு, தியாகத்தின் முன்மாதிரியைக் காட்ட வேண்டும். தியாகம் செய்தால் மட்டும் போதாது. மாறாக, அந்த முன்மாதிரியில் அன்பும், தியாக மனப்பான்மையும் வெளிப்பட வேண்டும். பிறகு அல்லாஹ்விற்கு பணிவு மிகவும் பிடித்தமானதாகும். ஒரு நம்பிக்கையாளருக்கு பணிவு பற்றி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. **பெரும்பாலான மக்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுகின்றபோது**

**அதிகமான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு ஆணவம்தான் தடையாக இருக்கிறது.** ஓர் அஹ்மதி குறிப்பாக பணிவை மேற்கொள்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தப் பண்பை குறிப்பாக பாராட்டியிருக்கிறான். **'உமது பணிவான வழிகள் அவனுக்குப் பிரியமானதாக ஆகி விட்டது'** என இறைவன் அன்னாரிடம் கூறினான். எனவே நாம் அவர்களைச் சார்ந்தவர்களாக வாதம் செய்யும்போது அவர்களின் இந்த பண்புகளையும் மேற்கொள்ள வேண்டியதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. அவ்வாறே நல்லெண்ணம் கொள்ளுதல், உண்மையை வெளிப்படுத்துதல் ஆகியவை. எல்லா நிலையிலும் உண்மையை வெளிப்படுத்துவது அவசியமானதாகும். உண்மை, நீதி பற்றி அல்லாஹ் கூறும்போது, அது உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினர்களுக்கோ எதிரானதக இருந்தாலும் உண்மையே கூறுங்கள். உண்மையை கை விட்டு விடாதீர்கள் எனக் கூறுகிறான். மன்னித்தல், பொறுமை செய்தல் ஆகிய இவையெல்லாம் நன்மைகளாகும். இவற்றை நாம் மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். **மேலும் அதிகமான மக்கள் ஒன்று சேர்ந்திருக்கும்போது - சில விஷயங்கள் நடக்கும்போதுதான் மனிதனுடைய நல்லொழுக்கம் பற்றி தெரிய வருகின்றன.**

பிறகு நீதியையும், அதிகமான நன்மையையும் மேற்கொள்ளுமாறு திருக்குர்ஆன் வலியுறுத்திக் கூறியிருக்கிறது. அந்த அளவுக்கு வேறு எந்த மார்க்கமும் கூறவில்லை. பகைவர்களின் பகைமையும் உங்களை நீதியிலிருந்து விலக்கி விட வேண்டாம். இதுதான் இஸ்லாத்தின் தனிச் சிறப்பான அந்தஸ்து ஆகும். ஒரு முஸ்லிமின் அந்தஸ்து ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுவதாவது மாநாட்டில் அதிகமாக மக்கள் வருகின்றனர் என்றால் உயர்ந்த ஒழுக்கத்தினை உண்மையான முறையில் வெளிப்படுத்துங்கள். **உயந்த ஒழுக்கத்தை வெளிப்படுத்துவோம் என்றால் நாம் உலகத்தில் இஸ்லாத்தின் உயர்ந்த போதனையை எடுத்து வைப்பவர்களாக ஆகி விடுவோம். இந்த முன்மாதிரிதான் அஹ்மதிய்யத்தின் தப்லீகிற்கும் காரணமாக அமைகின்றது.**

இரண்டு மாதங்களுக்கு முன், ஜெர்மனியிலும் மாநாடு நடைபெற்றது. அதில் முஸ்லிம் அல்லாத ஒரு கணவன் மனைவி அருகிலுள்ள நாட்டிலுருந்து வந்திருந்தனர். அவர்கள் **இஸ்லாத்திற்கு எதிரானவர்களாகவும் இருந்தனர்.** உலகில் நாங்கள் அமைதியை நிலைநாட்டுபவர்களாவோம் என அஹ்மதிகள் கூறுகின்றனரே மாநாட்டில் சென்றுதான் பார்ப்போமே அதில் என்ன உண்மை இருகிறது என்ற எண்ணத்தில் வந்திருந்தனர். அங்கு சென்று ஆட்சேபணை செய்வோம்; வேறு எந்த தாக்கத்தையும் பெற மாட்டோம் என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது. **ஆனால் மாநாட்டின் சூழ்நிலையைப் பார்த்ததற்குப் பிறகு அவர்கள் சந்திக்கவும் செய்தனர். அவர்களின் நிலை எந்த அளவுக்கு மாறி விட்டதென்றால் அவர்கள் பைஅத் செய்து விட்டனர்.** ஆக, மாநாட்டில் கலந்து கொள்பவர் ஒரு மவுனமான தப்லீகை செய்துகொண்டிருக்கிறார். எனவே மாநாட்டில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு ஆணும், பெண்ணும், சிறுவரும், சிறுமியரும், பெரியவரும் கவனத்தை ஈர்க்கக் கூடிய அளவுக்கு தனது முன்மதிரியை ஆக்க வேண்டும். அந்த முன்மாதிரி தற்காலிகமாக இருக்கக் கூடாது. மாறாக, நம்மை உண்மையான முஸ்லிமாக ஆக்குகின்ற அளவுக்கு நிரந்தரமான மாற்றத்தை நாம் நம்மிடத்தில் உருவாக்க வேண்டும். நாம் மாநாட்டின் மூலமாக உண்மையான பயனைப் பெறுவதற்காக நம்மில் ஒவ்வொருவரும் தமது முக்கியத்துவத்தையும் பொறுப்பையும் உணர்வையும் உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

நீங்கள் அறிபவர்களுக்கும், அறியாதவர்களுக்கும் சலாம் கூறுங்கள் என ஹதீஸில் வருகிறது. இது எப்படிப்பட்ட கட்டளை என்றால் இதன் ஆன்மாவைப் புரிந்தவாறு நாம் செயல்பட்டால், உலகத்தின் குழப்பங்கள் முடிவுக்கு வர முடியும். மனிதன் ஒருவருக்கு உள்ளத்தால் சாந்தியின் தூதை எடுத்து வைக்கும்போது, உள்ளத்தில் வெறுப்பும், பொறாமையும் அல்லது ஆணவமும் வெளிப்படுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

பிறகு ஏற்பாடுகள் தொடர்பான சில விஷயங்களையும் நான் கூறுகிறேன். எந்த ஆண்களுடன் குழந்தைகளும் இருக்கின்றார்களோ - சிறிய குழந்தைகள் பொதுவாக தாய்மார்களுடன் இருக்கின்றனர். 8,9 வயதைக் கொண்ட குழந்தைகள் ஆண்களுடன் இருக்கின்றனர். **அவர்களை திருப்திப்படுத்துவதற்காக ஆண்கள் வெளியே செல்லும் அளவுக்கு - மாநாட்டு நேரங்களில் அவர்களை விளையாட அனுமதிக்கும் அளவுக்கு அவர்கள் சிறுவர்களாக இருப்பதில்லை. இவ்வாறு செய்வதால் பிறகு குழந்தைகளிடம் ஒருபோதும் மாநாடு பற்றிய கண்ணியம் உருவாகாது. 7 வயதிற்குப் பிறகு தொழுகை பற்றி எச்சரிக்கை செய்யுமாறு அறிவுரைக்குக்**

**காரணம், அந்த வயதில் குழந்தை உணர்வுடன் இருக்கிறது. எனவே நீ ஒரு நோக்கத்திற்காக வந்துள்ளாய். அதனை இப்போதிருந்தே கற்றுக் கொள் என அவனிடம் கூற வேண்டும்.** சிறு வயதிலிருந்தே பயிற்சி கொடுக்காவிட்டால் பிறகு பெரியவனானாலும் மாநாட்டைப் பற்றிய தூய தன்மை அவரிடம் ஒருபோதும் நிலைபெறாது. பிறகு அந்த குழந்தைகளை சாக்காக வைத்து தந்தையும் வெளியே சுற்றிக் கொண்டு திரிகிறார். மாநாட்டிற்கு ஒரு தவறான பாதிப்பு ஏற்படுகிறது. **பெண்களும் மாநாட்டைக் கேட்பதற்கு பதிலாக வெளியே உட்கார்ந்து கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற முறையீடும் வருகிறது. பெண்களும் மாநாட்டின் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும்.** ஏனெனில் ஒவ்வொரு சொற்பொழிவாளரும் இங்கு சொற்பொழிவாற்றும்போது அது அறிவையும், ஞானத்தையும் அதிகமாக்கக் கூடியதாக இருக்கிறது. எந்தவொரு சொற்பொழிவாளரும் திருக்குர்ஆன், ஹதீஸ், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் ஆகியவற்றிற்கு வெளியிலிருந்து எதுவும் பேசுவதில்லை. எனவே இன்னாரின் சொற்பொழிவைக் கேட்போம்; இன்னாரின் சொற்பொழிவைக் கேட்க மாட்டோம் என்றும் கூறக் கூடாது. ஒவ்வொரு சொற்பொழிவாளரும் ஆயத்தம் செய்து வருகிறார். அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டும். எனவே இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தைப் புரியுங்கள். மாநாட்டை எண்ணிக்கையை முழுமை செய்வதால் மட்டும் அதிக மாக்காதீர்கள். மாறாக உள்ளே அமர்ந்து கேட்டு இந்த மாநாட்டிலிருந்து சரியான முறையில் பயன் பெறுங்கள்.

**சிறிய குழந்தைகளை வைத்திருக்கின்ற தாய்மார்களுக்கு ஆயத்தம் செய்யப்பட்டுள்ள தனியாக உள்ள திடலிலும் குழந்தைகளின் கூச்சல் குறைவாகவும் குழந்தைகளின் கூச்சலை சாக்காக் கொண்டு பெண்கள் அதிகமாக பேசிக் கொண்டிருக்கின்றனர் என்ற முறையீடும் வருகிறது.** எனவே பெண்களும், லஜ்னா அமைப்பாளர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது. பெண்கள் மவுனமாக இருந்தால், குழந்தைகளின் சப்தம் அவ்வளவு அதிகமாக இருப்பதில்லை. பிறகு சொற்பொழிவின் குரல் காதில் கேட்க ஆரம்பித்து விடுகிறது.

பாதுகாப்புப் பணியில் இருபவர்களும் நல்ல பண்பை வெளிப்படுத்துவதுடன் ஆழமான பார்வையையும் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொன்றின் மீதும் ஆழமான பார்வை இருக்க வேண்டும். எந்தவொரு விஷயத்தையும் சாதாரணமாக கருதாதீர்கள். பாதுகாப்புப் பணியாளர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் மிகவும் எச்சரிக்கையுடன் தமது நாலாப் புறமும் கவனமாக பார்த்துக் கொண்டிருங்கள். கவனம் செலுத்த வேண்டிய ஏதாவதொரு விஷயத்தைக் கண்டால் உடனே அமைப்பாளர்களுக்கு தெரிவியுங்கள். பிறகு நுழையும் நேரத்தில் அல்லது வெளியேறும் நேரத்தில் மிகவும் பொறுமையை கடைபிடிக்க வேண்டியதிருக்கிறது. கலந்து கொள்பவர்கள் பணியில் அமர்த்தப் பட்டிருக்கின்ற ஒவ்வொருவரின் வழிகாட்டலையும் - அவர் சிறியவராக இருந்தாலும் பெரியவராக இருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுங்கள். அவருடைய விஷயத்தைக் கேளுங்கள். நிகழ்ச்சியில் அநேகமாக இந்த எல்லா விஷயங்களும் எழுதப்பட்டுள்ளன. அவற்றைப் படியுங்கள். அவற்றின்படி செயல்பட முயற்சி செய்யுங்கள்.

பிறகு உங்களுக்கு வழங்கப்படும் கார்டை சரியாக பயன்படுத்துங்கள். அதை பாதுகாப்பதும் கடமையாகும். தனக்குத் தெரிந்த ஒருவருக்கு தனது கார்டை கொடுத்து விடுவது ஆகியவை இருக்கக் கூடாது. எந்தெந்த இடத்தில் உட்காருவதற்கு, செல்வதற்கு அந்த கார்டில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதோ அங்கேயே அதனை பயன்படுத்துங்கள். அது அவருக்காக மட்டுமே பயன்படுத்தப்பட முடியும். அல்லாஹ் இந்த மாநாட்டை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக என அதிகமாக துஆ செய்து கொண்டிருங்கள். ஒருவருக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு சதகாவும் கொடுக்கலாம் - ஏன் - கொடுக்க வேண்டும்; கொடுக்கட்டும். அல்லாஹ் இந்த மாநாட்டை அருளுக்குரியதாக ஆக்குவானாக். நாம் இதன் அருள்களை ஒன்று சேர்ப்பவர்களாக ஆவோமாக.

**Summarized By: Majlis Ansarullah Bharath**

**Translated By: *O.M.Muzzammil Ahmad* For TAMIL Desk**

**Published By Nazarat Nashr-O-Isha'ath Qadian, 143 516, Punjab**